## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான
## Higher Educational Special Loan Scholarship

பல்கலைக்கழக விடுதிகளில் தங்கி பயில்பவர்கள் மட்டும் தகுதியுடையவர்கள். புதிய விண்ணப்பத்துடன் மேற்கண்ட சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் ரூ.20/- மதிப்புள்ள Bond Sheet-ல் (Affidavit) விவரங்களை டைப் செய்து **Notary Public** -யிடமிருந்து மாணவர்களின் படிப்பின் விவரத்துடன் பெற்றோர் ஆண்டு வருமானம், வகுப்பு (Community) மற்றும் பெற்றோர் கையொப்பம் பெறப்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
இரண்டாமாண்டு பயிலும் மாணவ/மாணவியர்கள் **Higher Educational Special Loan Scholarship**க்கு புதுப்பித்தல் விண்ணப்பிக்கும் போது இம்மாணவர்கள் புகைப்படத்துடன் கூடிய விடுதியில் தங்கி பயிலுவதற்கான உண்மை தன்மை சான்றிதழ் **(Hostel Bonafide Certificate)** மட்டும் செலுத்தினால் போதுமானது. இம்மாணவர்கள் புதிதாக விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.

## முழுநேர முனைவர் பட்டம் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு மட்டும்

முழுநேர முனைவர் பட்டம் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.1,00,000/- கல்வி உதவித்தொகை மாநில அரசின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. திட்டம் தொடர்பான விதிமுறைகளை அறிந்து கொள்ளவும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க ஏதுவாக இத்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான அரசு இணைய தளத்தில் **(www.tn.gov.in/forms/deptname/1)** வெளியிடப்பட்டுள்ளது.

## விதிமுறைகள்

இக்கல்வி உதவித்தொகையை பெறும் தகுதி வாய்ந்த அனைத்து மாணவ/மாணவியர்களும் மைய அரசு திட்டம் (உதாரணமாக ராஜீவ்காந்தி தேசிய நிதியுதவித் திட்டம், செம்மொழிக்கான கல்வி உதவித்தொகை, பல்கலைக்கழக மானியக்குழுவால் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத் திட்டம், மனித வள மேம்பாட்டுத் துறையால் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் உள்ளிட்ட பிற உதவித்தொகைத் திட்டங்களின் கீழ் பயன் பெற்றிருப்பின், அல்லது மாநில அரசின் பிற கல்வி த்துறைகளின் மூலம் பிற திட்டங்களின் கீழ் பயன்பெற்றிருப்பின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைப்படி பிற கல்வி உதவித்தொகையினை திரும்ப செலுத்த வேண்டும்.

பெற்றோர் குடும்ப ஆண்டு வருமானம்:-

| | |
|---|---|
| 1. பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் | ரூ. 2,50,000/-க்கு கீழ் |
| 2. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் | ரூ. 2,50,000/-க்கு கீழ் |
| 3. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் **(Higher Educational Special Loan Scholarship)** | ரூ. 2,50,000/-க்கு கீழ் |
| 4. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் (முழு நேர முனைவர் பட்டம் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு மட்டும்) | ரூ. 8,00,000/-க்கு கீழ் |


பதிவாளர் அலுவலகம்
சி மற்றும் ஜி பிரிவு, கல்வி உதவித்தொகை

0422-2428115

## DOCUMENTS REQUIRED TO APPLY FOR SCHOLARSHIPS

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த (PG/M.Phil/Ph.D) அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களின் விவரங்கள்

| புதியது **(Fresh)** முதலாமாண்டு மாணவர்கள் | புதுப்பித்தல் **(Renewal)** இரண்டாமாண்டு மாணவர்கள் |
|---|---|
| 1. வகுப்புச் சான்றிதழ் (Community Certificate)<br>2. வருவாய் வட்டாட்சியரிடமிருந்து புதிதாக பெறப்பட்ட ஆண்டு வருமானச்சான்று (Income Certificate)<br>3. 10th மற்றும் 12th மதிப்பெண் சான்றிதழ்கள்<br>4. இளங்கலைப் பட்ட சான்றிதழ்கள் (UG Provisional, Consolidate or Degree Certificate) மட்டும்.<br>5. மாற்றுச்சான்றிதழ் (Transfer Certificate)<br>6. மாணவர்களின் வங்கி கணக்கு எண் நகல் *(குறிப்பு: அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் செயல்படும் (Bank of India வங்கியில் வங்கி கணக்கு எண் துவங்க வேண்டும்), மேலும் வங்கி கணக்கு எண் புத்தகத்தின் முதல் பக்க நகல் மற்றும் வங்கிக் கணக்கு எண்ணை அவர்களது கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தில் தவறாது பதிவு செய்யப்பட வேண்டும்.<br>7. குடும்ப அட்டை நகல் (Family Ration Card/Family Smart Card)<br>8. *ஆதார் எண் அட்டை நகல், *அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி (Mail ID தெளிவாக இருக்க வேண்டும்)<br>9. உண்மைத் தன்மை சான்றிதழ் (Bonafide Certificate), (Hosteller and Days Scholars) | 1. வகுப்புச் சான்றிதழ் (Community Certificate) மற்றும் வருமானச்சான்று (Income Certificate)<br>2. மாணவர்களின் வங்கி கணக்கு எண் நகல்<br>3. குடும்ப அட்டை நகல் (Family Ration Card/Family Smart Card)<br>4. *ஆதார் எண் அட்டை நகல், *அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி (Mail ID தெளிவாக இருக்க வேண்டும்)<br>5. உண்மைத் தன்மை சான்றிதழ் (Bonafide Certificate), (Hosteller and Days Scholars) |

எல்லா உணர்வும் ஒன்றாதல் உணர்க -பாரதியார்